### மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின்

# ‘மதி’ கிறிஸ்துமஸ் - புத்தாண்டு - பொங்கல் விற்பனைக் கண்காட்சி!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்!

சென்னை, டிச.18-

**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் மதி கிறிஸ்துமஸ் புத்தாண்டு - பொங்கல் விற்ப னைக் கண்காட்சியினை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (18.12.2025) அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் துவக்கி வைக்கிறார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுய உதவிக் குழு மகளிரின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அத்திட்டங்களின் பயனாக இன்று சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, வருவாய் ஈட்டி, பொருளாதார சுயசார்பு பெற்று வருகின்றனர்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்கள் அனைத்துத் தரப்பினரையும் சென்றடையும் வகையிலும், அவர்களின் தயாரிப்புப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும், மாநில/மாவட்ட/வட்டார அளவில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சிகள், மதி அனுபவ அங்காடி, மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்கள், மதி அங்காடி, மதி இணையதளம், மதி சிறுதானிய உணவகம், இயற்கைச் சந்தைகள் விற்பனைக் கண்காட்சிகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு சந்தைகள் என பல்வேறு செயல்பாடுகள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் முன்னெடுக்கப்பட்டு வருவதன் வாயிலாக இன்று சுய உதவிக் குழுக்கள் பொருளாதார முன்னேற்றம் அடைந்து வருகின்றனர்.

தொடர்ச்சியாக, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில், சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் மதி கிறிஸ்துமஸ், ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் பொங்கல் விற்பனைக் கண்காட்சியினை 18.12.2025 அன்று சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் துவக்கி வைக்கிறார்.

18.12.2025 முதல் 04.01.2026 வரை நடைபெறும் மதி கண்காட்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களான நாட்டுச் சர்க்கரை, பனங்கற்கண்டு, மூலிகைப் பொருட்கள், சிறுதானிய பொருட்கள், சிப்ஸ் வகைகள், வெட்டிவேர் பொருட்கள், மண்பாண்டங்கள், மரச் செக்கு எண்ணை வகைகள், மரச் சிற்பங்கள், பெட்ஷீட்கள், மரச் சிற்பங்கள், பட்டுச் சேலைகள், முந்திரி, மிளகு, ஊறுகாய், கைத்தறி துண்டுகள், தலையணை உறைகள், கண்ணாடி வளையல்கள், மசாலாப் பொருட்கள், வத்தல், வடகம், உலர் மீன்கள், பருத்தி வேட்டிகள், வாசனைப் பொருட்கள், மூலிகைத் தைலங்கள், பருப்பு வகைகள், சமையல் பொடிகள், செயற்கை ஆபரணங்கள், கைத்தறி துண்டுகள், மூங்கில் மற்றும் மர கைவினைப் பொருட்கள், தேன் நெல்லி, பாரம்பரிய அவல், இரும்புப் பாத்திரங்கள், வீட்டுத் தயாரிப்பு சாக்லேட்டுகள், கேக்குகள், சத்து மாவுகள், ஆயத்த ஆடைகள், கருப்பட்டி, நெய், தேன், பால்கோவா, பருத்தி உள்ளாடைகள், பாரம்பரிய அரிசி வகைகள், நவீன கைப்பைகள், பரிசுப் பொருட்கள், சணல் பைகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை விற்பனை செய்திட 46 அரங்குகளும், கிராமிய பாரம்பரியமும், சுவையும் நிறைந்த உணவு வகைகளை விற்பனை செய்திட 5 உணவு அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன.

நாள்தோறும் காலை 10.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை நடைபெறும் இக்கண்காட்சியில் வார இறுதி நாட்களில் கலை நிகழ்ச்சிகள், இலவச வாகனங்கள் நிறுத்துமிடம் போன்ற அம்சங்கள் நிறைந்துள்ளன. இக்கண்காட்சிக்கு அனுமதி இலவசம்.

இத்தகைய சிறப்புமிக்க மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் மாநில அளவிலான மாபெரும் மதி கிறிஸ்துமஸ், ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் பொங்கல் விற்பனைக் கண்காட்சிக்கு பொதுமக்கள் அனைவரும் வருகை தந்து, பல்வேறு மாநில மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரித்த தரமான பொருட்களை வாங்கி பயனடைவதோடு, மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவிட வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.



நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று (17.12.2025) தலைமைச் செயலகத்தில் சட்டத்துறையில் பணியாற்றும் 11 அரசு சார்புச் செயலாளர்களுக்கு தங்களது பணிகளை தங்கு தடையின்றி மேற்கொள்ள ஏதுவாக மடிக்கணினிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அரசு செயலாளர் சி. ஜார்ஜ் அலெக்சாண்டர், கூடுதல் செயலாளர்கள் முனைவர் கு. மகேஷ் குமார், ப.அன்புச் சோழன் மற்றும் சட்டத் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 2025–2026ஆம் ஆண்டிற்கான புதிய 28 சட்டத்துறை

# தன்னார்வ பயிற்சியாளர்களுக்கு பயிற்சிக்கான நியமன ஆணைகள்!

## அமைச்சர் துரைமுருகன் வழங்கினார்!

சென்னை, டிச.18-

சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று (17.12.2025) சென்னை தலைமைச் செயலகத்தில் 2025-2026-ஆம் ஆண்டிற்கான புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 28 சட்டத்துறை தன்னார்வ பயிற்சியாளர்களுக்கு (Law Interns) பயிற்சிக்கான நியமன ஆணைகள் வழங்கினார்.

மேலும், எந்த நேரத்திலும், இருந்த இடத்தில் இருந்தவாறே, தங்களது பணிகளை தங்கு தடையின்றி மேற்கொள்ள ஏதுவாக சட்டத்துறையில் பணியாற்றும் 11 அரசு சார்புச் செயலாளர்களுக்கு 11 “மடிக்கணினிகளையும்” அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அரசு செயலாளர் சி.ஜார்ஜ் அலெக்சாண்டர், கூடுதல் செயலாளர்கள் முனைவர் கு. மகேஷ் குமார், ப.அன்புச் சோழன் மற்றும் சட்டத் துறையின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### நூறு நாள் வேலைத் திட்டப் பயனாளிகளின்

# பொருளாதார மேம்பாடு குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளதா?

## மக்களவையில் – டி.ஆர்.பாலு வினா!

*புதுடெல்லி, டிச. 18-*

*நூறு நாள் வேலைத் திட்டமான மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டத்துக்காக இதுவரை ஒன்றிய அரசு மாநில வாரியாக செய்த செலவு விவரங்கள் என்ன.? இந்த திட்டத்தின் விளைவாக ஊரகப் பகுதி பயனாளிகளின் பொருளாதார மேம்பாடு குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டனவா? அப்படியானால் அவற்றின் விவரங்கள் என்ன என்று நாடாளுமன்ற மக்களவையில் திமுக மக்களவைக் குழுவின் தலைவரான டி.ஆர்.பாலு கேள்வி எழுப்பி இருந்தார். இதற்கு 16.12.2025 அன்று கேள்வி*



*நேரத்தில் எழுத்து பூர்வமாக ஒன்றிய ஊரக வளர்ச்சி அமைச்சர் அளித்த பதில் வருமாறு:*

*திட்டம் தொடங்கிய 2006-07 முதல் 11.12.2025 வரை அனைத்து மாநிலங்களிலும் சேர்த்து மொத்தம் பத்து லட்சத்து அறுபதினாயிரத்து அறுநூற்று எழுபத்தி நான்கு (10,60,674) கோடி ரூபாய் செலவிடப் பட்டுள்ளது. மேலும், சென்ற ஆறு ஆண்டுகளில் சராசரியாக நாடு முழுவதும் ஆண்டு ஒன்றுக்கு 302 கோடி மனித நாட்கள் அளவுக்கு வேலை அளிக்கப்பட்டுள்ளது.*

*மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்தினால் பயனாளிகளின் குடும்ப வருவாய், வறுமைநிலைக் குறைபபு பற்றிய ஆய்வு ஒன்றிய அரசின் நீத்தி ஆயோக் கின் வளர்ச்சிக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு அலுவலகம் வாயிலாக மேற்கொள்ளப் பட்டது. மூன்றாம் தரப்பு ஆய்வாக செய்யப்பட்ட இந்த ஆய்வில் முடிவில் ஊரகப்பகுதிகளில் நிலையான சொத்துக்கள், மேம்படுத்தப் பட்ட நீர் வளம், மண்வளப் பாதுகாப்பு மற்றும் கூடுதல் விளைச்சல் போன்ற பயன்கள் உருவாக்கப்பட்டதன் விளைவாக ஊரக வறிய மக்களின் வாழ்வாதாரம் உறுதி செய்யப் பட்டுள்ளதாக கண்டறிய ப் பட்டுள்ளது.*

*இவ்வாறு ஒன்றிய ஊரக வளர்ச்சிக்கான இணை அமைச்சர் கமலேஷ் பஸ்வான் அவர்கள் தனது பதிலில் தெரிவித்தார்.*

### மக்கள் முதல்வரின் மனிதநேய விழா!

# “அன்னம் தரும் அமுத கரங்கள் திட்டம்”!

## 19.12.2025 முதல் 01.01.2026 வரை நடைபெறும் இடங்களின் விவரம்: அமைச்சர்- மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

*சென்னை,டிச.18-*

*“அன்னம் தரும் அமுத கரங்கள்” கீழ்கண்ட நாட்களில் நடைபெறும் விவரம் பின்வருமாறு:*

**நாள் 19.12.25 வெள்ளிக்கிழமை**
**303 ஆம் நாள்**
**அம்பத்தூர் வடக்கு பகுதி**

*1) வட்டம் 79 அ, மாசிலாமணீஸ்வரர் தெரு, ஏரிக்கரை சாலை, வெங்கடேஸ்வரா நகர் அம்பத்தூர், வட்ட செயலாளர், பு.வீரா*

*2) வட்டம் 79, A.K நகர் ஆயிரம் காத்தம்மன் கோயில் அருகில், ஒரகடம்*

*வட்ட செயலாளர் வே. ரவீந்திரன்*

**20.12.25 சனிக்கிழமை**
**304 ஆம் நாள்**
**வில்லிவாக்கம் மேற்கு பகுதி**

*1) வட்டம் 95 தாந்தோணி அம்மன் கோயில் தெரு, வட்ட செயலாளர் மா. அகிலன்*

*2) வட்டம் 95 அ புதிய ஆவடி சாலை, வட்ட செயலாளர் பா. ஜானி*

**நாள் 21.12.25 ஞாயிற்றுக்கிழமை**
**305ஆம் நாள்**
**திரு.வி.க நகர் தெற்கு பகுதி**

*1) வட்டம் 76, செல்லப்பா தெரு, ஸ்டாரன்ஸ் ரோடு சந்திப்பு, ஓட்டேரி*

*தலைமை எஸ். சசிகுமார்*

*2) வட்டம் 73, குக்ஸ் சாலை, பழைய ஓட்டேரி, தபால் நிலையம் அருகில்,*

*வட்ட துணை செயலாளர் அ. மூவேந்தன்*

**நாள் 22.12.25 திங்கட்கிழமை 306ஆம்**
**அம்பத்தூர் தெற்கு பகுதி**

*1) வட்டம் 89,கோல்டன் காலனி, அவ்வை நகர் கார்னர், வட்ட செயலாளர் எம்.இ. சேகர் எம்.சி.*

*2) வட்டம் 88, தேவர் நகர் மெயின் ரோடு, கொடிக்கம்பம் வட்ட செயலாளர், சி. சீனிவாசன்*



**நாள் 23.12.25 செவ்வாய்க்கிழமை**
**307ஆம் நாள்**
**எழும்பூர் வடக்கு பகுதி**

*1) வட்டம் 99, சண்முகராயன் தெரு, வட்ட செயலாளர் ஆர்.எம் ரங்கநாதன்*

*2) வட்டம் 99அ, சாஸ்திரி நகர், கீழ்ப்பாக்கம் நெடுஞ் சாலை,*

*வட்ட செயலாளர் சி .சேகர்*

**நாள் 24.12.25 புதன்கிழமை**
**308 ஆம் நாள்**
**திரு. வி.க நகர் வடக்கு பகுதி**

*1) வட்டம் 72, எம் எஸ் முத்துநகர் (மசூதி அருகில்), கன்னிகாபுரம்*

*வட்ட செயலாளர் M.A டீக்கா*

*2) வட்டம் 72அ, டாக்டர் அம்பேத்கர் நகர் மெயின் தெரு, புளியந்தோப்பு*

*வட்ட செயலாளர் M.Z அபோய்*

**நாள் 25.12.25 வியாழக்கிழமை**
**309 ஆம் நாள்**
**துறைமுகம் தொகுதி**

*1) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 57, தண்ணீர் தொட்டி தெரு, வால்டாக்ஸ் ரோடு வட்ட செயலாளர் ஜி. ராமமூர்த்தி*

*2) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 56அ, வள்ளுவர் நகர் பிரகாசம் சாலை பிராட்வே. வட்டச் செயலாளர் எம்.பரத் குமார்*

**நாள் 26.12.25 வெள்ளிக்கிழமை**
**310 ஆம் நாள்**
**கொளத்தூர் கிழக்கு பகுதி**

*1) வட்டம் 68அ, ஜவகர் நகர் முதல் சர்குலர் சாலை, முதல்வர் சட்டமன்றம் அலுவலகம் அருகில் வட்ட செயலாளர் PTC .ரவி*

*2) வட்டம் 67அ, ஒத்தைவாடை தெரு, சாமுண்டீஸ்வரி நகர், வட்ட செயலாளர் K. ஜார்ஜ் குமார்*

**நாள் 27.12.25 சனிக்கிழமை**
**311 ஆம் நாள்**
**எழும்பூர் தெற்கு பகுதி**

*1) வட்டம் 58அ, ராம விலாஸ் ஹோட்டல் எதிரில், சூளை பேருந்து நிறுத்தம் அருகில் வட்ட செயலாளர் R.பாபு*

*2) வட்டம் 58, நேவல் மருத்துவமனை சாலை, பெரிய மேடு*

*வட்ட செயலாளர் V. விஜயகுமார்*

**நாள் 28.12.25 ஞாயிற்றுக்கிழமை**
**312 ஆம் நாள்**
**கொளத்தூர் மேற்கு பகுதி**

*1) வட்டம் 64, 34வது தெரு, GKM காலனி (கட் ரோடு) ,*

*வட்ட செயலாளர் M.D தமிழ்ச்செல்வன்*

*2) வட்டம் 66, வேல்முருகன் நகர், திருப்பதி நகர் விரிவு,*

*வட்ட செயலாளர் N.ராமச்சந்திரன்*

**நாள் 29.12.25 திங்கட்கிழமை**
**313 ஆம் நாள்**
**துறைமுகம் தொகுதி**

*1) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 59 அ, காந்திநகர் அண்ணா சாலை*

*வட்ட செயலாளர் வே. பா. பிரபாகரன்*

*2) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 55, எழுகிணறு பூங்கா அருகில்,*

*ஏழு கிணறு தெரு. வட்டச் செயலாளர் எல் சத்தியநாரயணன்.*

**நாள் 30.12.25 செவ்வாய்க்கிழமை**
**314 ஆம் நாள்**
**அம்பத்தூர் கிழக்கு பகுதி**

*1) வட்டம் 82 அ, கள்ளிகுப்பம் ஆர்ச் அருகில், கள்ளிகுப்பம், வட்ட செயலாளர் ஆ. சுந்தரராஜ்*

*2) வட்டம் 82, 20B பஸ் நிலையம் அருகில், மேனாம்பேடு, பகுதி பொருளாளர் இ.ராமு*

**நான் 31.12.25 புதன்கிழமை**
**315 ஆம் நாள்**
**வில்லிவாக்கம் கிழக்கு பகுதி**

*1) வட்டம் 98 ஆ, K.K நகர் 2வது தெரு, மசூதி பின்புறம், வட்ட செயலாளர் காஞ்சி. செ.துரை*

*2) வட்டம் 96, புது தெரு, அயனாவரம் வட்ட செயலாளர் , ஏ.வேதா*

**நாள் 1.1.26 வியாழக்கிழமை**
**316 ஆம் நாள்**
**துறைமுகம் தொகுதி**

*1) துறைமுகம் மேற்கு பகுதி, வட்டம் 57 அ, ஆதியப்பன் தெரு கோவிந்தப்பன் தெரு, வட்ட செயலாளர் பா. அண்ணாதுரை*

*2) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 55அ, அம்மன் கோயில் தெரு சடையப்பன் தெரு சந்திப்பு, வட்டச் செயலாளர் எஸ். புகழேந்தி.*

*மேற்கண்ட காலை உணவு வழங்கும் நிகழ்ச்சியில் திட்ட ஒருங்கிணைப்பாளர்களாக சொ.வேலு, எஸ்.முரளி, ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல். சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் செயல்படுவார்கள்.*

*இவ்வாறு அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு அறிவித்துள்ளார்.*





காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம் ஏகனாம்பேட்டை அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டியை மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் ஒன்றிய குழு துணைத் தலைவர் பி.சேகர், ஒன்றிய குழு உறுப்பினர் டி.சஞ்சய் காந்தி பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் எம்.சண்முகம் உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் தலைமை ஆசிரியர் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இந்தப் பள்ளியில் சென்றாண்டு பன்னிரெண்டாம் பத்தாம் வகுப்பு முதல் மூன்று இடத்தை பிடித்த மாணவியருக்கு சொந்த நிதியில் பரிசுத்தொகை வழங்கினர்.




# தி.மு.க. இளைஞர் அணி

## மாவட்ட சமூக வலைதள துணை அமைப்பாளர்கள் நியமனம்

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

*கழகத் தலைவர் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் – தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன் கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு, சமூக வலைதளப் பயிற்சியளிக்கவும், அவர்களின் சமூக வலைதளம் சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்கவும், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.*

*இந்தப் பொறுப்புகளுக்கு தமிழ்நாடு முழுவதும் இருந்து 1,450–க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்ட நிலையில், அவர்களை நேரில் அழைத்து, இதுவரை ஆற்றிய களப்பணிகள் மற்றும் சமூக வலைதளப் பணிகளை ஆய்வு செய்தோம். அவற்றின் அடிப்படையிலும், மாவட்டக் கழகச் செயலாளர்களின் பரிந்துரையின் பேரிலும் இவர்கள் தேர்வுசெய்யப்படுகின்றனர்.*

*அந்த வகையில், இளைஞர் அணி மண்டலம் 1–க்கு உட்பட்ட கழக மாவட்டங்களுக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சமூக வலைதள மாவட்ட துணை அமைப்பாளர்களின் விவரம் வருமாறு:*

| வ. எண் | மாவட்டம் | துணை அமைப்பாளர் (சமூக வலைதளம்) |
|---|---|---|
| 1 | சென்னை மேற்கு | மு.சிவசிதம்பரம், 16/18, பெரியார் பாதை, பாரதி தெரு, சூளைமேடு, சென்னை - 94 |
| 2 | சென்னை தெற்கு | வி.சண்முகநாதன், 35, கென்னடி தெரு, டி.பி. நகர், தரமணி, சென்னை - 113 |
| 3 | சென்னை வடக்கு | வெ.சு.சத்தியநாராயணன், 36/4–ஏ, தாண்டவராயன் கிராமணி தெரு, தண்டையார்பேட்டை, சென்னை - 81 |
| 4 | சென்னை கிழக்கு | அ.ராக்கிப் ஹுசைன், 5, சுல்தான் தெரு, மண்ணடி, துறைமுகம், சென்னை - 1 |
| 5 | சென்னை வடகிழக்கு | வீ.மணிகண்டன், 3/90, கருமாரி அம்மன் கோயில் தெரு, சின்னமாத்தூர், மாத்தூர், சென்னை - 68 |
| 6 | சென்னை தென்மேற்கு | க.அருண்குமார், 33/15, 3வது அவென்யூ, அசோக் நகர், சென்னை - 83 |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 17-12-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி